Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின்
யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES
சுப்ப சூஸ்
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-414)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 30 (04.01.2003) சனிக்கிழமை இதழ் : 95

# பகைமையோடு பேசுகிறார் பலகல்ல; விடுதலைப் புலிகள் கடும் அதிருப்தி!

### விண்ணாணம் விநாசியர்



பிரதமர் ஒரு பக்கமும் பலகல்ல மற்றப்பக்கமும் துருவங்கள் மாதிரியெல்லே நடக்கினம்...

## ஆயுதக்களைவுப் பேச்சுக்கே இடமில்லை அன்ரன் பாலசிங்கம் உறுதியாக அறிவிப்பு



(லண்டன்)

**கனரக ஆயுதங்களை மட்டுமன்றி எந்த ஆயுதங்களையும் களைவதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இல்லை. மீள்குடியமர்வுக்கு இராணுவத்தளபதி பலகல்ல தொடர்ந்தும் பகைமையுணர்வுடன் நிபந்தனைகள் விதிப்பதையிட்டு நாம் கடும் அதிருப்தி அடைகிறோம் எனப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று அறிவித்தார்.**

இது தொடர்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தபோது, இராணுவத் தரப்பின் பகைமை மனோபாவத்தையிட்டு தாம் கடும் அதிருப்தி கொண்டிருப்பதாகவும், இந்நிலை தொடருமேயானால் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியாது போகும் எனவும் கூறியுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வை மேற்கொள்ள இராணுவத்தளபதி மீண்டும் தமது நிலைப்பாட்டை வலியுறுத்தி இருப்பதற்கு கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், ஆயுதக்களைவு என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் தெரிவித்தார்.

தாய்லாந்து பேச்சுக்களில் ஆயுதக்களைவு பற்றி எவ்விதத்திலும் பேசப்போவதில்லை. இராணுவத்தின் பகைமையுணர்வு சமாதானப் பேச்சுக்களுக்கு சுமுகமான சூழ்நிலையை உருவாக்காது. மாறாக, அதனைப் பாதிக்கவே செய்யும் எனவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

## தாய்லாந்து பேச்சுக்கு புலிகளின் குழு நேற்று வன்னியிலிருந்து புறப்பட்டது

அடுத்தகட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று மாலை கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டுச்சென்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மற்றும் உதவியாளர்களான அலெக்ஸ், நெடியவன், தொல்காப்பியன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றுமாலை 5.00 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து விமானப்படையின் உலங்குவானூர்தி மூலம் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர். அதேவேளை, மட்டக்களப்பில் இருந்து புலிகளின் மூத்த தளபதி கேணல கருணாவும் நேற்று பி.ப. 2 மணியளவில் பளுகாமத்திலிருந்து ஹெலி மூலம் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றார்.

இவர்கள் இன்று அதிகாலை கொழும்பில் இருந்து விமானம் மூலம் தாய்லாந்துக்குப் புறப்பட்டனர்.

## அடுத்த சுற்றுப் பேச்சுக்களும் றோஸ் கார்டின் ஹோட்டேலில்

(கொழும்பு)

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான அடுத்த கட்டப்பேச்சுக்கள் நாளை மறுதினம் தாய்லாந்து நாட்டின் நகோன்பொத்தம் நகரில் ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி நகரில் உள்ள 'றோஸ் கார்டின்' ஹோட்டேலில் இப்பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பேச்சுக்களில் கலந்து கொள்ளுவதற்காக அரச மற்றும் புலிகளின் பிரதிநிதிகள் நாளைய தினம் அங்கு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

அரசதரப்பில் அமைச்சர் ஜி.எல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை குழப்ப எச் சக்தியாலும் முடியாது

### பிரதமர் ரணில் பேட்டி

சமாதானப் பேச்சு வார்த்தையை குழப்புவதற்கு எந்த சக்திகளாலும் முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து சகல அரசியல் கட்சிகளுக்கும் எடுத்துக்கூறுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுச்செய்தி முகவர் ஒருவருக்கு நேற்று மாலை வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அந்தப்பேட்டியில் மேலும் அவர் தெரிவிக்கையில், அரசியல் தீர்வு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பேச்சுக்களில் முஸ்லிம்கள் சார்பில் மூவர்

(கொழும்பு)

தாய்லாந்தில் நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் அடுத்தகட்டப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக ரவூப் ஹக்கீம் தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவும் செல்லவுள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் காதர், பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஹஸ்புல்லா ஆகியோரே தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இக்குழுவினர் அரசு புலிகள் பேச்சுக்களில் பங்குபற்றுவதுடன் விடுதலைப்புலிகளுடன் தனிப்பட்ட வகையிலும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். (200)

## காணாமற்போன இளைஞர் பலியானாரா?

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு கடற்பரப்பில் மீனவர்களின் படகு மீது கடற்கடையினரின் டோறாப் படகு மோதிய சம்பவத்தில், காணாமற்போன கடற்தொழிலாளர் மரணமடைந்து விட்டதாக நம்பப்படுகிறது. தொண்டமனாறைச் சேர்ந்த ஞானேஸ்வரன் என்ற மேற்படி இளைஞரைத் தேடித் தேடுதல் நடாத்தியும் இதுவரை கண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீரோடு தேடுகின்றேன் கண்ணே எங்கே போனாய்?



உரும்பிராயில் நடந்த செ.துவாரகா என்ற சிறுமியின் மர்ம மரணத்தைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தால் பூட்டப்பட்டிருந்த உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம், நேற்று நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து மீளத் திறக்கப்பட்டது. பலியான சிறுமியின் பேரனார் செல்லன் சிவக்கொழுந்து தன் பேத்தியின் நினைவால் கண்கள் கலங்கிய நிலையில், பாடசாலையின் பிரதான வாயிலைத் திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.

*(படம்: கிருபாகரன்)*

## எம்மை மீளக்குடியமர விடுங்கள் வலி.வடக்கு மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மக்களின் மீள்குடியமர்விற்கு அனுமதிக்கக்கோரி, தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன்பாக வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமாகியது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்றுக்காலை 8 மணிக்கு, வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவமகாராஜா தலைமையில் இடம்பெற்ற இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில் பெருமளவிலான மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.

இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில்- நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார், ரவிராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ் உண்ணா விரதப்போராட்டம் தொடர்பாகவும் மக்களின் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கக் கோரியும் மகஜர் ஒன்றினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பவும் நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு வரும் ஜப்பானிய அமைச்சர் நிதியுதவி குறித்தும் ஆராய்வார்

(கொழும்பு நிருபர்)

ஐந்து நாள் விஜயமாக கொழும்பு வரவுள்ள ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொறிக்கோ கவாகுச்சி, வட-கிழக்குப் பகுதிகளில் ஜப்பான் வழங்கவுள்ள நிதியுதவிகள் குறித்தும் நேரில் ஆராயவுள்ளார்.

வன்னியில் கண்ணி வெடிகளை அகற்றும் பிரிவுக்கு 4 லட்சத்து 63 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும்,

யாழ்ப்பாணத்தில் கண்ணி வெடியகற்றும் பணிக்கு ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்துக்கு 3 லட்சத்து 53 ஆயிரம் டொலர்களையும், இது தொடர்பான ஆரம்ப சேவைகளுக்காக 3 லட்சத்து 53 ஆயிரம் டொலர்களையும் ஜப்பான் வழங்கியுள்ளது.

இந்த நிதியுதவிகள் தொடர்பாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் நோல் ஆராய்வார் எனவும் தெரியவருகின்றது.

(01)

## சிறு விளம்பரம்

### தேவை

மீன் பிடிக்கும் வலைக்கு சாயம் போடும் கண்டல் பட்டை (காய்ந்தது) நல்ல விலைக்கு வாங்கப்படும்.

க.செ. கைலாசபிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை (மருந்துக் கடை), யாழ்ப்பாணம். (சி-411)

# தமிழ் இலக்கணப் பூங்கா நூல் வெளியீட்டு விழா!

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தால் ஆக்கப்பட்ட "தமிழ் இலக்கணப் பூங்கா" நூல் வெளியீட்டு விழா, எதிர் வரும் 13 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் சபா.ஜெயராசாவும், ஆய்வுரைகளைக் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, நா.குழந்தைவேலு ஆகியோரும்- சிறப்புரையைத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரனும் நிகழ்த்தவுள்ளனர்.


ராஜா
யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த

சுந்தரா டிராவல்ஸ்

10.30, 2.30, 6.00

(சி-398)

நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித், மீனா நடித்த

வில்லன்

11.00, 2.45, 6.00 (பு.நே.) (சி/397)


# இன்றைய நாள் இனிய நாள்

**04-01-2003 - சனிக்கிழமை**

**மேடம்** :- நினைத்த காரியம் கைகூடும், செலவுகள் அதிகமாக இருக்கும், வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**இடபம்** :- விரோதிகளால் ஆபத்து, நெஞ்சுச் சளி, காய்ச்சல் வாட்டும், மனநிம்மதி இராது..

**மிதுனம்** :- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும், கல்வி, தொழில் முன்னேற்றம், வாகன சுகம் உண்டு.

**கர்க்கடகம்** :- யோசனை மிகுதி, அதிக அலைச்சல், உடல்சோர்வு, ஏமாற்றம், வெளியூர் பிரயாணம்.

**சிங்கம்** :- பொருள் வரவு, வாகனத்தால் நட்டம், அதிக செலவு, அலைச்சல்.

**கன்னி** :- தொழில் முன்னேற்றம், வாகன யோகம், வெளியூரிலிருந்து பொருள் வரவு.

**துலாம்** :- இரத்தக் காயம், மனவேதனை, உறவினரால் தொல்லை, இடமாற்றம், அலைச்சல்.

**விருச்சிகம்** :- வயிற்றுவலி, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, சகோதரரால் நன்மை.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**தனு** :- விபத்துக்கள் உண்டாகும், யோசனை மிகுதி, எடுத்த காரியம் தடைப்படும்.

**மகரம்** :- விவாக முயற்சி கைகூடும், புத்திரரால் மகிழ்ச்சி, எதிர்பாராத வரவு.

**கும்பம்** :- நோய் வாட்டும், அயலவருடன் பகை, தொழில் ஸ்தானத்தில் பிரச்சினைகள்.

**மீனம்** :- கல்வி முன்னேற்றம், சத்துரு வெற்றி, உறவினரால உதவி, பொருள் வரவு உண்டு.

# ஆங்கில மாதிரி வினாத்தாள்

இம்முறை **G.C.E. O/L** தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். வீட்டிலிருந்தபடியே மாதமிருமுறை ஆங்கிலப்பாடப் பரீட்சை எழுதலாம். உங்கள் பெறுபேறுகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள, முத்திரையுடன் கூடிய சுயமுகவரியுடைய தபாலுறையுடன் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**R.இந்திரன்,**
**சயன்ஸ் சென்ரர்,**
**குடியிருப்பு,**
**வவுனியா.**

முக்கிய குறிப்பு:-
*கல்வி நிறுவனங்களும் தேவையான பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.* (சி/409)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான

## கேள்வி கோரல்

யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு விநியோகிப்பதற்காக கீழ்குறிப்பிடப்பட்ட உணவுப் பொருள் வழங்கலுக்கான கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| உணவுப் பொருள் | மாதாந்த விநியோகம் மெற்றிக்தொன் | மாதாந்த கேள்வித் தொகை | | |
|---|---|---|---|---|
| | | 2003 ஜனவரி | 2003 பெப்ரவரி | 2003 மார்ச் |
| பிறிமா கிறீன் (Green) மா | 1000 MT | 1000 MT | 1000 MT | 1000 MT |

மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகக் கணக்காளரிடம் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) ரூபா 380,000.00 ஐ யாழ்.மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகக் கணக்காளரிடம் செலுத்தி (அரசாங்க கேள்வி நடைமுறை வழிகாட்டி அத்தியாயம் IV பந்தி 46:7 இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிற்குப் பொருந்தாது) பணப்பற்றுச் சீட்டினை (பொது 172) பெற்று அதன் புகைப்படப் பிரதியை கேள்விப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூரணப்படுத்திய இருகேள்விப்படிவத்தினைத் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமோ கணக்காளரது அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.01.20 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

நீளத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி'' என எழுதப்பட வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

2003.01.04 ஆம் திகதி தொடக்கம் 2003.01.16ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை கேள்விப் படிவங்களையும், ஆவணங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலக கணக்காளர்/உதவித்திட்டப் பணிப்பாளர் (நிவாரணம்) ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டளை பிறப்பிக்கப்பட்டு ஒரு (01) வாரத்திற்குள் நாவற்குழி உணவுக்களஞ்சியத்தில் / கோண்டாவில் உணவுக்களஞ்சியத்தில் மாவை ஒப்படைக்க வேண்டும்.

விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து இரு (02) வார காலத்திற்குள் கொடுப்பனவு காசோலை மூலம் செய்யப்படும்.

**செ.பத்மநாதன்,**
*தலைவர் / அரச அதிபர்*
*மாவட்டக் கேள்விச்சபை / மாவட்டச் செயலகம்.*
*யாழ்ப்பாணம்.* (சி-408)



# மறைந்தும் மறையாத

# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீடும்

தரணியெங்கும் தவிக்கும் தமிழர்தம் உரிமைக்குரலை
கர்ச்சித்த மறத் தமிழனை நன்றி மறவாமல் நினைவு கூருவோமாக

**இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 05.01.2003 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : மாலை 3.30 மணி**

*நிகழ்ச்சி நிரல்*

மலர் அஞ்சலி :
வரவேற்புரை : திரு.அ.விநாயகமூர்த்தி (யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)
தலைமையுரை : திரு.கனகசபை சிவானந்தமூர்த்தி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
கௌரவ அதிதிகள் உரை : 1. சிவசிறி சோ. தண்டபாணி தேசிக ஐயர் (ஜே.பி., பிரதம குருக்கள், ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறை)
2. அருட்தந்தை J.P.E. செல்வராசா (குரு முதல்வர், யாழ்.மாவட்டம்)
நினைவுப் பேருரை : திரு.V.T.தமிழ்மாறன் (தலைவர், சட்டத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்)
நினைவஞ்சலி உரைகள் : 1. திரு.சி.வீ.கே.சிவஞானம் (முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், யாழ்.மாவட்ட அமைப்பாளர்)
2. திரு.K.T. கணேசலிங்கம் (விரிவுரையாளர், அரசறிவியல், சமூகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
3. திரு.ஆர்.ஈ.ஆனந்தராஜா (உபதலைவர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
4. கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
மூன்றாம் ஆண்டு நினைவு மலர் வெளியீடு : திரு.க.மு.தர்மராசா (பொருளாளர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
நன்றியுரை : திரு.தி.மகேந்திரராசா (பொதுச் செயலாளர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

மாமனிதர் குமார் பொன்னம்பலம் கடைசியாக கனடாவில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி ஆற்றிய உரை, ஒளிப்பதிவு நாடா மூலம் காண்பிக்கப்படும்.

தமிழ் பேசும் இனத்திற்காக இறுதி மூச்சுவரை போராடி, இறுதியில் தன்னுயிரையே தியாகம் செய்த தீந்தமிழனுக்கு, எமது நன்றிக்கடனைச் செலுத்த அனைவரும் திரண்டுவந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,**
**கோப்பாய் தொகுதிக் கிளை.**

(சி-410)

# உரும்பிராய் சிறுமியின் மர்ம மரணம் நீதியைப் பெற ஐவர் குழு அமைப்பு!

## மாணவர் பாதுகாப்பை உறுதி செய்யவும் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவி செ.துவாரகா பாடசாலையில் மர்மமான முறையில், மரணமானதற்கு நியாயமான தீர்வு கிடைக்கவேண்டி, நேற்றுக்காலை 10 மணியளவில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

இக்கண்டனக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அயற் பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் இப்பிரதேச மக்கள் என ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன் கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சிவஞானசுந்தரம், இப்பகுதி சனசமூக நிலையத் தலைவரும் செ. துவாரகாவின் உறவினருமாகிய சி. மார்க்கண்டு,. இப்பாடசாலையின் பழைய மாணவனும் லண்டன் நியூகாம் நகரசபை உறுப்பினருமாகிய போல் சத்தியநேசன், உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன், பாடசாலை அதிபர் ப.ஆனந்தராஜா, கிராமசேவகர் த.செல்வச்சந்திரன், யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க.இராஜலிங்கம், தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த கவியன்பன் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் எனப் பலரும் உரையாற்றினர்.

இவர்கள் இங்கு உரையாற்றும்போது -

குற்றம் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவதோடு, எமது நாட்டிலே இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும், இப்பாடசாலையின் ஏனைய மாணவர்களின் கல்வி பாதிப்படையாத வகையில், பாடசாலையை ஆரம்பிக்க உதவுமாறு இப்பகுதி மக்களிடம் கேட்டுக் கொண்டனர்.

கண்டனக் கூட்டத்தின் இறுதியில், மாணவியின் மரணத்திற்கு நீதியான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கும், இப்பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களது பாதுகாப்பினை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற வகையிலும், பாடசாலைக்குச் சுற்றுமதில் அமைத்துப் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்கும் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவின் தலைவராக யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் தெரிவு செய்யப்பட்டதுடன், குழு அங்கத்தவர்களாக பாடசாலை அதிபர் ப. ஆனந்தராஜா, மரணமான மாணவியின் உறவினர் பா.சந்திரமோகன், உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் க.ஈஸ்வரநாதன் மற்றும் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.சி.ரி.கிருஷ்ணராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்குழுவின் செயற்பாடு இன்று முதல் ஆரம்பிக்கப்படுவதாகக் குழுவின் தலைவர் உரையாற்றுகையில் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(கி,ச)



உரும்பிராய் மாணவியின் மரணத்தைக் கண்டித்து நேற்று பாடசாலையில் நடத்தப்பட்ட கண்டனக்கூட்டம்.



உயிரிழந்த மாணவிக்கு பாடசாலையில் சக மாணவர்களும், பெற்றோரும் அஞ்சலி செலுத்துகின்றனர்.

# உரும்பிராய் வித்தியாலயம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது!

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவி செ.துவாரகாவின் மர்ம மரணத்தைக் கண்டித்து, கடந்த இரண்டு நாட்களாகப் பூட்டப்பட்டிருந்த பாடசாலை மீண்டும் நேற்று திறக்கப்பட்டது.

மாணவியின் மரணத்திற்கு நியாயமான தீர்வு வேண்டி, நடாத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள், கல்விக் கழக உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரின் வேண்டுதலை அடுத்து, நேற்றுப்பகல் 12.30 மணியளவில் மரணமான மாணவியின் பேரனால் பாடசாலையின் பிரதான நுழைவாயில் திறக்கப்பட்டு, கல்விச் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டன.

பாடசாலையினுள் உட்பிரவேசித்த அதிபர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பெற்றோர்கள் அனைவரும் மரணமான மாணவிக்கு அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பாடசாலை நிர்வாகத்திற்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்குமிடையே கலந்துரையாடல் நடைபெற்றது.

அத்துடன் திங்கட்கிழமை முதல் பாடசாலைச் செயற்பாடுகள் நடைபெறும் என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(கி,ச)

### சமாதானத்தினால் கிடைத்த பலன்

# பெரும் வளர்ச்சிப் போக்கில் கொழும்புப் பங்குச் சந்தை!

இலங்கையில் யுத்தநிலை தணிந்துள்ளதை அடுத்துக் கொழும்புப் பங்குச் சந்தை இரண்டாவது வளர்ச்சி வேகமுள்ள பங்குச்சந்தை என்ற நிலையை ஆசியாவில் எட்டியிருப்பதாக இது தொடர்பான புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அத்துடன், உலகிலுள்ள பங்குச் சந்தைகளில், வளர்ச்சி வேகம் கூடிய ஐந்து பங்குச் சந்தைகளில், கொழும்புப் பங்குச்சந்தையும் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் பங்குவிலைச் சுட்டெண் 31 சதவீதத்தை எட்டியுள்ளது. முதலிடத்தில் பாகிஸ்தானின் பங்கு விலைச் சுட்டெண் 110 சதவீதத்தைக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

# வட - கிழக்கைப் பிரிப்பதற்கு தெற்கில் கையொப்ப வேட்டை

## தினேஷ் குணவர்த்தன அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இவர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் கூறினார்.

1987ம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கமைய இரு மாகாணங்களும் ஒன்றிணைக்கப்பட்டன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருமாகாணங்களையும் ஒன்றிணைப்பதற்குக் கருத்துக் கணிப்பு நடத்தவேண்டும் என்று கூறப்பட்டுள்ளபோதும், இதுவரை கருத்துக் கணிப்பு எதுவும் நடத்தப்படவில்லை. இதனாலேயே இந்த இருமாகாணங்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட இந்த இரு மாகாணங்களையும் பிரிக்குமாறு கோரி மக்களிடமிருந்து கையொப்பங்கள் திரட்டுவதற்கு மக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### உலகளாவிய சிறந்த தமிழ்ப் பாடகர் தெரிவு

# ஆயிரக்கணக்கான மக்கள் கூடிய சுவிஸ் மிலேனியம் விருது விழா

சுவிஸில் வருடா வருடம் புதிய வருடத்தை முன்னிட்டு நடாத்தப்படும் நிகழ்வை - இவ்வாண்டு மிகவும் சிறப்பான முறையில் சுவிஸின் தலைநகர் பேர்ணில், தமிழ்த் தொலைக்காட்சி இணையம், சுவிஸ் மெலேனியம் பிலிம், ஐ.பி.சி. ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து நடாத்தின.

இந்நிகழ்வில் மிலேனியம் விருதிற்கான சிறந்த பாடகர் போட்டியான, பாடும் சுரங்கள் நிகழ்ச்சியில் ஐரோப்பா நாட்டில் வாழும் தமிழர்களுடன் யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் நடாத்திய தெரிவுப் போட்டியில் தெரிவான இசைஅமுதன் சிறப்புப் பாடகராக கலந்துகொண்டார்.

நான்காவது வருடமாக நடைபெறும் இந்நிகழ்வில், சிறப்பம்சங்களாக, தாயகத்தில் இருந்து வருகை தந்த புதுவை இரத்தினதுரை மற்றும் நகுலன், தாஸ் ஆகியோருடன் இசைஅமுதன் சிறப்புப் பாடகராக பங்குகொண்டு அனைத்து தமிழ் நெஞ்சங்களின் பாராட்டுதல்களையும், பரிசில்களையும் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பங்குகொண்ட மக்கள் போன்று ஐரோப்பாவில் வேறு எந்த தென்னிந்திய ஜனரஞ்சக நிகழ்வுகளிலும் - 7,000 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொள்ளவில்லை என்பதும்,

இந்நிகழ்வானது முழுக்க முழுக்க தாயகக் கலைஞர்களை வைத்து நடாத்தப்பட்ட பாரிய நிகழ்வு என்பதும் குறிப்பிடத்தக்கது. சுமார் 10 மணித்தியாலங்கள் நீடித்த இந்நிகழ்வில் புதுவை இரத்தினதுரை, நகுலன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

# பொருளாதார வளர்ச்சி வீதம் உயரும்!

(கொழும்பு)

இந்த வருடம் பொருளாதார வளர்ச்சி வீதம் மூன்று வீதத்திலிருந்து 5 வீதத்துக்கு உயருமென மத்திய வங்கி ஆளுநர் டபிள்யூ.ஏ. விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் நிலவிய யுத்தச் சூழல் தணிந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதால், இந்தப் பொருளாதார வளர்ச்சி வீதம் உயருமென அவர் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு 3 ஆம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் 5.3 ஆக உயர்ந்துள்ளது. இது 2003 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் 5 இற்கு உயருமென அவர் மேலும் தெரிவித்தார்.

### பிறப்பு, இறப்பு பத்திரங்களைப் பெற வசதியாக

# பதிவாளர் திணைக்களத்தின் கிளை யாழ்ப்பாணத்திலும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை மிகவும் சுலபமாகப் பெறும் வகையில், பதிவாளர் திணைக்களத்தின் கிளையொன்று யாழ்ப்பாணத்தில் திறக்க இருப்பதாகப் பதிவாளர் நாயகம் எல்.கே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் முடிவடைவதற்குள் உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகாராவினால் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படும்.

இதற்கான உதவியை யுனிசெவ் வழங்கியுள்ளது. இதேவேளை - பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு பதிவுத் திணைக்களங்களுக்குப் புகைப்படப்பிரதி எடுக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கு 'யுனிசெப்' உதவியளிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

(கு)

# திருமலையில் பரவும் மஞ்சள் காமாலை ஒரு குழந்தை பலி; அறுபது பேர் பாதிப்பு

(திருமலை)

திருகோணமலைப் பகுதியில் மஞ்சள் காமாலை நோய் பரவிவருவதாகச் சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை செய்துள்ளது.

திருகோணமலை நகரப்பகுதி, கந்தளாய், தம்பலகாமம் ஆகிய பகுதிகளிலேயே மஞ்சள் காமாலைநோய் அதிகமாகப் பரவிவருகின்றது.

நகரப்பகுதியில் மட்டும் 49 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கந்தளாயில் 12 பேர் நோய்த்தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். இந்நோயால் ஒரு குழந்தை உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

திருமலைப்பகுதியில் மஞ்சள் காமாலை நோய் வேகமாக பரவிவருவதால், உப்புவெளிப் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த ஆறு உணவகங்களை மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அகற்றப்படாத முட்கம்பி, மிதிவெடிகள்; 300 ஏக்கர் விவசாய நிலம் பாதிப்பு!

## அச்செழு மக்கள் கவலை தெரிவிப்பு

(ஊரெழு)

அச்செழு இராணுவ முகாமைச் சூழவுள்ள பிரதேசங்களில் உள்ள- விவசாய நிலங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் முட்கம்பிகளால் அமைக்கப் பட்ட பாதுகாப்புவேலிகள், காவலரண்கள் என்பன இன்னமும் அகற்றப்படாமல் இருப்பதால் - அப்பகுதியில் உள்ள சுமார் 300 ஏக்கர் விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளது.

முகாம் சூழலில் மக்கள் படிப்படியாக மீளக்குடியமர்ந்து வருகின்றபோதும்- படைத்தரப்பு, விவசாய நிலங்களில் இருந்து தமது காவலரண்கள், முட்கம்பிவேலிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றி - விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தம்மை அனுமதிக்காமை குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (96)

# பாடசாலைகள் ஆரம்பித்தும் பாடநூல் விநியோகம் சீரில்லை!

## மாணவர், பெற்றோரிடையே அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் யாவும் புதிய கல்வியாண்டின் முதல் தவணைக்கு ஆரம்பிக்கப்பட்டபோதிலும், மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்கள் சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் சுயகற்றலில் விரும்பி ஈடுபடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த கல்வியாண்டின் இறுதித் தவணையில் வழங்கப்பட வேண்டிய இலவசப் பாடநூல்கள் இதுவரை இங்கு வழங்கப்படவில்லை, தரை வழிப்பாதை திறந்த பின்பும் இலவசப் பாடநூல் விநியோகம் ஏன் தாமதமாகியுள்ளது என்று பலரும் கேள்வியெழுப்புகின்றனர்.

அத்துடன் தரம் ஐந்திற்குரிய புதிய பாடத்திட்டப் பாடநூல்களும், ஆசிரிய கைந்நூல்களும் ஒழுங்காக அனுப்பி வைக்கப்படவில்லை. பெரும்பாலான கல்விக் கோட்டங்களிலே சமய பாடப்புத்தகம் மட்டுமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டால்- ஆசிரியர்கள் இவ்வாண்டிற்குரிய வேலைத் திட்டத்தினை தயாரிப்பதில் பெரும் சிரமப்படுவதாகவும் அறிய முடிகின்றது. (கி,ச)

# ஐந்து அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்பாடு

(கொழும்பு நிருபர்)

ஐ.தே.மு. அரசாங்கத்திலுள்ள ஐந்து அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர பொது ஜன ஐக்கிய முன்னணி நடவடிக்கை எடுத்துவருவதாக முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர்கள் ஜெயலத் ஜெயவர்த்தன, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், திலக் மாரப்பன, ரவி கருணாநாயக்க, ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் மீதே நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான இறுதி முடிவு நாளைமறுதினம் 6 ஆம் திகதி எடுக்கப்படவிருக்கின்றது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் அன்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

## மீளக் குடியமர்வோருக்கு 500 வீடுகள்

(வடமராட்சி கிழக்கு)

ஜீ.ரீ.இசற் நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 500 வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்த மருதங்கேணி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கே - வீடுகள் கட்டிக்கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (17)

## சின்னஞ் சிறு செய்திகள்

### மீன்பிடியியல் டிப்ளோமா பதிவு செய்ய அழைப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2002/2003 ஆம் ஆண்டுக்கான மீன்பிடியியல் டிப்ளோமாக் கற்கைநெறி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கைநெறியைப் பயில்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பதிவுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு, யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான கிளையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே- மாணவர்கள் தமது பதிவைச் சகல ஆவணங்களுடனும், பதிவுக்கட்டணத்துடனும் நேரில் வந்து மேற்கொள்ளுமாறும், மேற்குறித்த திகதிக்குப் பின்னர்- எக்காரணம் கொண்டும் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (100)

### வல்லையில் இராணுவப் பொலிஸின் சோதனை நிலையம்

(வடமராட்சி)

வல்லை இராணுவச் சோதனைச் சாவடி அமைந்துள்ள பகுதியில் இராணுவப் பொலிஸாரின் சோதனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சோதனை நிலையத்தில் சில இராணுவப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன்- வடமராட்சிப் பிரதேசத்திற்கு உள்ளேயும், வெளியேயும் செல்லும் கனரக வாகனங்கள் பதிவு செய்யப்பட்டே செல்ல அனுமதிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

இத்துடன்- இராணுவப் பொலிஸாரின் சோதனை நிலையம் என்ற பெயர்ப்பலகையும் புதிதாகப் அமைக கப்பட்டுள்ளது. (ச,கி)

### அறிவுச்செல்வம் பரிசளிப்பு விழா

தமிழ் தொலைக்காட்சி இணையத்தினரும், இலத்திரனியல் ஊடக இணையமும் இணைந்து, கடந்த டிசம்பர் மாதம் நடாத்திய - அறிவுச் செல்வம் 2002, பாடும் சுரங்கள் இசைத்திறன் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே- பாடும் சுரங்கள் இசைத்திறன் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்ற அனைத்துப் போட்டியாளர்களையும் 2223919 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### பருத்தித்துறை விபத்தில் இருவர் காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதான வீதியில், தட்டாதெருப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியால் வந்துகொண்டிருந்த ஒருவர் மீது மோதியது.

இவ்விபத்தில் இ.நாகலிங்கம் (40 வயது) என்பவர் காயமடைந்தார். மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த துன்னாலையைச் சேர்ந்த கி.ஜெயசீலன் (28 வயது) படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### சண்டிலிப்பாயில் சுயதொழில் பயிற்சி நெறி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினூடாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்பட இருக்கும் மின் இணைப்பு, தச்சுவேலை, மேசன்வேலை ஆகிய சுயதொழில் பயிற்சிநெறிகளுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 8 ஆம் வகுப்பில் சித்தியுடன் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். இப்பயிற்சிநெறி 6 மாத காலத்திற்கு நடைபெறும். ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் ரூ. 450 வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னதாக- இலங்கை அதிகார சபை, தொழிற்பயிற்சி நிலையம், சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி போதனாசிரியர் வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (43)

### வசதிகளற்ற நிலையில் நவக்கிரி முன்பள்ளி

(ஊரெழு)

நவக்கிரி காந்தி முன்பள்ளி நிலையம் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கிவருகின்றது.

மேற்படி முன்பள்ளியில் தற்போது 30 சிறுவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்குத் தளபாட வசதிகள் இல்லாமையினால் சாணகம் பூசப்பட்ட வெறும் தரையில் இருந்தே கல்விபயிலும் அவலநிலை இருப்பதாக முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (96)

# உயிர்ப்பலி வாங்கும் இனந்தெரியாத வைரஸ்; எங்கே தவறியது யாழ்ப்பாணக் குடாநாடு!

யாழ்.குடாநாட்டில் அனைத்து மக்களையும் குறிப்பாக, மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையினரையும் இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் அதிர்ச்சியிலாழ்த்தி வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் மிகத் துரிதமாகப் பரவிக்கொண்டிருக்கும் இக் காய்ச்சலினால், யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டும் இதுவரை 7 பேர் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு ஏழுபேர் இக்காய்ச்சலினால் மரணமடைந்துள்ளனர் என்றால் இது ஓர் சிறிய விடயமல்ல. எனவே - இக்காய்ச்சலுக்கு உரிய தீர்வினைக் கண்டுபிடித்து இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்போரைக் காப்பாற்றுவதுடன், இக்காய்ச்சல் மேலும் பரவாமல் தடுக்கும் பொறுப்பும் யாழ்.குடாநாட்டிலுள்ள மருத்துவத்துறையினருக்கும், சுகாதாரத்துறையினருக்கும் உள்ளது. இப்பொறுப்பிலிருந்து எவரும் விலகமுடியாது.

இவ்வைரஸ் காய்ச்சல் தொடர்பாகப் பலரும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இவர்களில் ஒரு சாரார்- இக் காய்ச்சல் ஏ-9 கண்டி வீதி திறந்த பின்னர்தான் வருகின்றதெனவும், இன்னொரு சாரார் - இக் காய்ச்சல் ஒரு விதமான வைரஸ கிருமியினாலேயே தொற்றி வருகின்றதெனவும், பிறிதொரு சாரார்- இக் காய்ச்சலானது சுகாதாரச் சீர்கேடு காரணமாகத்தான் இக்காய்ச்சல் வருகின்றதெனவும் தத்தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனரே தவிர, இக்காய்ச்சல் இதுவரை இனங்காணப்படாத துரதிர்ஷ்டமான நிலையே நிலவுகின்றது.

இவ்வைரஸ் காய்ச்சலை தடுப்பதுமுதல் இனங்காணுவதுவரை ஒவ்வொரு துறையினரும் மாறிமாறி ஆளையாள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். ஆனால் எவரும் இக்காய்ச்சல் எதனால் வந்தது? எப்படி வந்தது? இக்காய்ச்சலைத் தடுப்பதற்கு என்ன செய்வது? என்ற வினாக்களுக்கு இன்னும் விடை காணவில்லை.

அண்மைக்காலமாக இக்காய்ச்சலினால் ஒருநாளைக்கு ஒருவராகவும், ஒருநாளில் மூவராகவும் பலியானோர் தொகை காணப்படுகின்றது. எனவே, இவ்வாறு மரணமடைதல் அதிகரித்துக் கொண்டுவரும் இந் நேரத்தில் - கருத்துக்களைத் தெரிவிப்பதுடன் அல்லது ஒருவரையொருவர் குற்றஞ் சுமத்துவதுடன் நின்றுவிடாது- அடுத்த கட்ட செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டோர் இறங்க வேண்டும்.

தற்போது மருந்துகள் கண்டுபிடிக்காத நோய்கள் பல இருக்கையில், இவ்வைரஸ் காய்ச்சலையும் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்காத நோய்களின் பட்டியலில் சேர்த்து விடாமல் - இக்காய்ச்சலுக்குரிய தடுப்பு மருந்தினை - வெளிநாடுகளில் பிரசித்தமான மருத்துவ நிபுணர்களைக் கொண்டோ அல்லது உள்நாட்டு மருத்துவ நிபுணர்களைக்

### செய்திக்கட்டுரை



கொண்டோ கண்டுபிடிப்பதுடன், இக்காய்ச்சலைப் பரப்பும் நோய்ககிருமியையும் இனங்காண வேண்டும்.

இது ஓர் சிறிய விடயமோ, சிறிய வேலைத் திட்டமோ அல்ல. இது பெருந்தொகையான மக்களுடன், ஒரு பிரதேசத்துடன் தொடர்புடைய மிகப் பெரிய விடயம். எனவே- இந்தப் பணியை அரசாங்கமோ அல்லது வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களோ உடனடியாக மேற்கொள்ள வேண்டும், தேவையான உதவிகளை வழங்க வேண்டும்.

இவ்வைரஸ் காய்ச்சல் விவகாரத்தில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. இதில் ஒன்று- நோய் வரும்முன் காத்தல். மற்றையது நோய் வந்தபின் நோயிலிருந்து காப்பாற்றல்.

இவற்றில் முதலாவதாக நோய் வரும்முன் காத்தல் நடவடிக்கையை மேற்கொள்ள யாழ்.குடாநாட்டில் இருக்கும் சுகாதாரப் பிரிவினர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பிரதேசசபைகள், மாநகர சபை ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கென விசேட செயலணி ஒன்றை உருவாக்கி, இவ் வைரஸ் காய்ச்சல் தொற்றக்கூடிய சூழ்நிலைகளைக் கண்டறிந்து அவற்றை முற்றாகத் தடுக்க முயற்சிப்பதுடன், அந்தந்தப் பிரதேசங்களில் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும். இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது புதிதாக இக்காய்ச்சலுக்கு உட்படுபவர்களின் தொகையை விரைவாகக் குறைக்கக்கூடிய சாத்தியம் ஏற்படலாம்.

மற்றையது - நோய் வந்தபின் காப்பாற்றுவது. அநேகருக்கு - இவ் வைரஸ் காய்ச்சல் வந்துவிட்டால்- என்ன மருந்து பாவிப்பதென்பது தெரியாத நிலையே நீடித்து வருகின்றது. இவ்வாறானநிலை நீடித்தால் - பல நோயாளிகள் உயிராபத்தைச் சந்திக்கும்நிலை தவிர்க்க முடியாததாகிவிடும். இதற்கு, மருத்துவத்துறையினர்- நோய் காணும் மக்கள் பின்பற்றவேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வைரஸ் காய்ச்சல் குறித்து- அரசாங்கத்தின், உலகின் கவனத்திற்குக் கொண்டுவந்து - ஆலோசனையை, அத்தரப்புக்களின் உதவியை, உடன் பெறுவது அவசியமான பணியாகும். வைரஸ் நோய்கள் பற்றி நிபுணத்துவம் கொண்ட விசேட வைத்தியகுழுவொன்றை குடாநாட்டிற்கு வரவழைத்து தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

எனவே - இப்புதுவிதமான வைரஸ் காய்ச்சலைக் குடாநாட்டிலிருந்து ஒழிக்க, குடாநாட்டிலுள்ள சகல தரப்பினரும் ஒருமித்துச் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அதேவேளை- வெறுமனே இப் பணி - மருத்துவத் துறையினருடையதோ அல்லது சுகாதாரத்துறையினருடையதோ அல்ல. மக்களுக்கும் இதுபற்றிய பொறுப்புணர்வும் வேண்டும். எனவே இவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி- குடாநாட்டைத் தழுவும் அச்ச உணர்வினை அகற்ற அனைவரும் செயலில் இறங்குவோம்.

தேவராஜா லிவிங்ஸ்டன்

## வார்த்தை விளையாட்டு - 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | | | 2 | | |
| | | 3 | | 4 து | |
| 5 | | ம் | | | |
| | | 6 | ல் | 7 | |
| 8 அ | | | ம் | | |
| | 9 | | | | 10 |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

**இடமிருந்து வலம்**

1. நேரம் காட்டும் கருவி.
3. கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில். பயன்படுத்தப்படுவது.
4. கிணற்றிலிருந்து நீரை அள்ளப் பயன்படும் பொறி.
5. நீங்கள் கற்கும் வகுப்பை இப்படிச் சொல்வீர்கள்.
6. உணவை அரைத்து உண்ண உதவும் உறுப்பு.
7. பழம்.
8. தமிழின் முதல் எழுத்து இப்படி அழைக்கப்படும்.
9. வீடுகளில் சமையல் பொருட்களை அரைக்கப் பயன்படுவது.

**மேலிருந்து கீழ்**

1. நீண்டதூர ஓட்டப் போட்டி.
2. நீண்ட தலைமுடி.
3. ஒரு விளையாட்டுப் பொருள்.
4. மகிழ்ச்சியின் எதிர்ப்பதம்.
10. நெருப்பு.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக் குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 08-01-2003

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 13

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**தர்மலிங்கம் சசிகாந்**
மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்

*2ஆம் பரிசு -*
**நிரோஷா சாந்தன்**
101, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

*3ஆம் பரிசு -*
**இராசமனோகரன் சஜீவ்**
கே.கே.எஸ். வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## வார்த்தை விளையாட்டு – 13
### சரியான விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. | புத்தகம் | 1. | புரவி |
| 4. | பாய் | 2. | தண்டம் |
| 5. | விகடம் | 3. | கரும்பு |
| 7. | பாம்பு | 4. | பாணம் |
| 8. | காம்பு | 6. | பாகம் |
| 10. | வேம்பு | 8. | புன்னை |
| 11. | தென்னை | 9. | காகம் |



# சிறுவர் அரங்கம்

## தொட்டுப்பார்க்க ஆசை



மாங்குளம் காட்டில் முத்து எனும் கரடி வசித்து வந்தது. ஒருநாள் தேன்குடிக்க மரத்தில் ஏறிய முத்து, அண்ணாந்து வானத்தைப் பார்த்தது. "ஆகா! இந்த வானந்தான் எவ்வளவு அழகு! பொசு பொசு மேகத்துடன் கொள்ளை அழகாக இருக் கிறதே!" என்று எண்ணிக் கொண்டே, அதைத் தொட்டுப் பார்க்க ஆசைப்பட்டது. விறுவிறுவென மரத்தின் உச்சியில் ஏறிக் குதித்துப் பார்த்தது. வானம் எட்டும் தூரத்தில் இல்லை.

வருத்தமடைந்த முத்து, கீழே இறங்கி யோசிக்க ஆரம்பித்தது. எல்லா மிரு கங்களையும் கூப்பிட்டு ஆலோசனை செய்தது. "உங்கள் எல்லோருக்கும் வானத்தைத் தொட ஆசையா? வாருங்கள்! எல்லோரும் சேர்ந்து முயற்சி செய்யலாம்" என்று திட்டம் போட்டது. எல்லா மிருகங்க ளுக்கும் ஆசை வந்து ஒப்புக்கொண்டன.

அதன்படி, மிருகங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஏறின. யானை, சிங்கம், புலி, சிறுத்தை, ஒட்டகம், ஒட்டகச் சிவிங்கி, நீர்யானை, காட்டுக்குதிரை, காட்டெருமை என்று அடுக்கடுக்காக ஏறின.

ஆக மேலே, கரடி ஏறி வானத்தை ஏறிட்டது. தொடலாம் என்று உயரஉயர எம்பியது. கீழே இருந்த மிருகங்கள் எல்லாம் ஆட்டம் கண்டு தொப்தொப்பென்று சரிந்து விழுந்தன. எல்லோருக் கும் சரியான அடி. முத்து கையில் அகப்பட்டால் வெளுத்துக் கட்டலாம் என்று எல்லா மிருகங்களும் ஆத்திரத்துடன் காத்திருக் கின்றன.

முத்து சிறு காயங்களுடன் தப்பியோடிவிட்டது. உங்கள் ஊருக்கு முத்து வந்தால் எங்களுக்குச் சொல்லுங்களேன்.

## உங்கள் கைவண்ணம்



**இ.கௌரிநிஷா**
தரம் - 10 c,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.



**இரா.பிரேமசாயினி**
தரம் - 11,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## விடுகதைகள்

1) யானை படுக்க நிழல் உண்டு, கடுகு மடிக்க இலை இல்லை. அது என்ன?
2) மூன்று பொலீஸ்காரருக்கு ஒரு தொப்பி. அது என்ன?
3) மூடாத வாய்க்கு முழு வால் அது என்ன?
4) முத்து முத்தாய் தோரணம். நிலத்தில் விழுந்து ஓடுது. அது என்ன?
5) முதுகிலே மூட்டை சுமந்து, மூன்று மணிக்கு முழம் போவான். அவன் யார்?
6) முற்றத்தில் நடக்கும் மூலையில் படுக்கும். அது என்ன?
7) போருக்கு போகாத வீரன் போர்க்களத்தையே விரட்டிடுவான். அவன் யார்?
8) மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்கும் பூ. அது என்ன?
9) நெருப்பில் சுட்ட மனிதன் நெடுங்காலம் வாழ்வான். அவன் யார்?
10) நீலக்கடலிலே வெண்பஞ்சு மிதக்குது. அது என்ன?

*உ.சிவாணி*
*தரம் 8,*
*யா/வட்டு. மத்திய கல்லூரி.*

### விடைகள்

1) சவுக்குமரம்
2) பனம்பழம்
3) அகப்பை
4) மழை
5) நத்தை
6) விளக்குமாறு
7) பாம்பு
8) நட்சத்திரம்
9) செங்கல்
10) வெண்மேகம்

# லேசர் ஒரு அறிமுகம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

1970களில் தொழிற்சாலைகளும் லேசரைப் பயன்படுத்தத் தொடங்கின. லேசரின், குவிக்கப்படும் ஒளிக்கற்றையால் உலோகங்கள், பிளாஸ்ரிக், துணி வகைகளை ஒட்டவோ, இணைக்கவோ முடியும். அத்துடன் இத்தகைய வேலைகளில் லேசரைப் பயன்படுத்தும்போது மிகவும் துல்லியமாக வேலைகளை மேற்கொள்ள முடிகின்றது.



லேசரின் தாக்கம் தகவல் தொடர்புத்துறையையும் விட்டுவைக்கவில்லை. கண்ணாடி இழை இணைப்புக்களின் ஊடாக கோடிக்கணக்கான செய்திகளை லேசர் ஒளிக்கதிர் தாங்கிச்செல்கின்றது. இது சாதாரண உலோகக்கம்பித் தொடர்பைவிட மிகவும் முன்னேற்றகரமானதொன்றாகும். இந்த முறையிலேயே அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான கடல்வழித் தொலைபேசி இணைப்பு அமைப்புச் செயற்படுகின்றது.



மருத்துவத்துறையிலும் லேசர் பல பயனுள்ள மாற்றங்களைச் செய்து வருகின்றது. இப்போது உடலிலுள்ள திசுவையோ, செல்லையோ லேசர் மூலம் அழித்து விடுவதன்மூலம், இரத்தக் கசிவின்றி எளிதாக அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வது வழக்கமாகிவிட்டது.

நீரிழிவு நோயுடன் சம்பந்தப்பட்ட- கண்களில் ஏற்படுகின்ற நோயையும், தசைநார்கள் தமது சக்தியை இழக்கின்ற நோயையும் இப்போது லேசரின் துணையுடன் முழுமையாகக் குணப்படுத்த முடிகின்றது. இந்த இரு நோய்களும் கண்ணில் முரண்பாடான இரத்தக் குழாய்களை உருவாக்கி இளம்வயதிலேயே பார்வைக் குறைபாடுகளை ஏற்படுத்தக் காரணமாக இருந்தன.

லேசர் கதிர்கள் மூலம் சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களின் 80 சத்வீதமானோர். அறுவைச் சிகிச்சை முடிந்த ஒரு சில மணி நேரங்களிலேயே வீடுகளுக்குத் திரும்பிவிட முடிகின்றது எவ்வளவு பெரிய மாற்றம் பார்த்தீர்களா...?

இவ்வாறு தொழில்நுட்பரீதியாக லேசரின் கண்டுபிடிப்பு மனித நாகரிகத்தை மேலும் மேலும் முன்னேற்றகரமான திசை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றது. கடந்த 25 ஆண்டுகளில் லேசர் நமது வாழ்க்கையில் ஏற்படுத்திய புரட்சியைவிட, இனி வரும் ஆண்டுகளில்தான் அதிகமான மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மனித நாகரிகத்தின் அளவுகோலாக லேசர் மாறியிருப்பதில் வியப்பில்லையே...?

## காலைக் காட்சி

கிழக்குத் திக்கிலே கதிரெழு முன்னே
கீழ்வானம் செஞ்சிவப்பாகுதே
பாடும் பறவைக் கூட்டங்களே
பாடியே இரையைத் தேடின.

விவசாயத் தோழர்களுள் சுறுசுறுப்பாயே
வீறு நடை போட்டு சென்றனரே
வயலுக்குச் சென்ற தோழரெல்லாம் களை தீர
வாஞ்சையுடன் பாடியே வேலை செய்தனரே!

சூரிய வருகைக்கு முன் எழுந்த மாணவருமே
சுத்தமாக்கித் தங்களை வெண்ணாடையணிந்தனரே!
பாடம் படிக்கும் பாங்குடனே
பள்ளிக்கு விரைந்தோடினரே!

சி.சே.கிறிஸ்டீன் பானுமதி,
தரம் 8 B,
யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

## தெரியுமா உங்களுக்கு?

1. வாழைப்பழத்தில் உள்ள விற்றமின்கள் எவை?
   *A, B, C, D, E*
2. சைக்கிள் சில்லில் உள்ள கம்பிகள் எத்தனை?
   *முன் - 32, பின் - 40*
3. நெருப்புக் கோழியின் பலம் எங்குள்ளது?
   *கால்களில்*
4. உருளைக்கிழங்கின் தாய்நாடு எது?
   *பெரு*
5. உலகின் மிக உயரமான பகுதியில் அமைந்துள்ள குகை எது?
   *சலாம் குகை*
6. சத்தமிடாத விலங்கு எது?
   *ஒட்டகச்சிவிங்கி*
7. பல்லில்லாத முலையூட்டி எது?
   *தேவாங்கு*

சிவரஞ்சினி மகேந்திரன்
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

## பொது அறிவு

1. நிழல் விழாத சுற்றுமதில் கொண்ட அரண்மனை எங்கே உள்ளது?
   தஞ்சாவு,ர்
2. பிரிட்டன் - பிரான்ஸ் இணைந்து தயாரித்த விமானம் எது?
   சுப்பர் சோனிக்
3. பனிப்போருடன் சம்பந்தப்பட்ட நாடுகள் எவை?
   அமெரிக்கா, ரஷ்யா
4. அணுகுண்டைக் கண்டுபிடித்த அறிவியல் மேதை யார்?
   அல்பேட் அயன்ஸ்ரீன்
5. முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
   ஜோர்ச் வாஷிங்டன்
6. சாக்கடல் எங்கே காணப்படுகிறது?
   ஜோர்தான், இஸ்ரேல் நாடுகளுக்கிடையில்
7. போதைப்பொருள் காரணமாகத் தண்டனை பெற்ற ஜனாதிபதி யார்?
   பனாமா நாட்டின் ஜனாதிபதி நொறியேகா
8. இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவான திகதி எது?
   29.07.1987
9. நோபல் பரிசை ஆரம்பித்தவர் யார்?
   அல்பிரட் நோபல்

ந.அன்ரனி றொபின்சன்,
தரம் - 6,
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர்:-
கஜேந்தினி கமலேஸ்வரன்
கற்கும் பாடசாலை :-
வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பிறேக் டான்ஸ், பரதம்.



முழுப்பெயர்:-
லோஜிப்பிரியா புலேந்திரன்
கற்கும் பாடசாலை :-
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.



முழுப்பெயர்:-
சகாதேவன் ரவிகுமார்
கற்கும் பாடசாலை :-
யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், கணிதம், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர்:-
காயத்திரி நாகேந்திரம்
கற்கும் பாடசாலை :-
யா/ துரையப்பா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், கவிதை.

முழுப்பெயர்:-
குணரட்ணம் ருத்ரநாத்
கற்கும் பாடசாலை :-
யா/ இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், கல்வித்துறை.

முழுப்பெயர்:-
யோகேஸ்வரன் அகிலன்
கற்கும் பாடசாலை :-
வவுனியா/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கல்வித்துறை.

முழுப்பெயர்:-
முருகேசு மிரோசன்
கற்கும் பாடசாலை :-
யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கவிதை, கட்டுரை, சித்திரம்.

முழுப்பெயர்:-
சுகர்னியா இராசமனோகரன்
கற்கும் பாடசாலை :-
யா/தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, தொலைக்காட்சி பார்த்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

-திருக்குறள்

## நமது நோக்கு

### பொறுப்புணர்வின்மைக்கு எச்சரிக்கை

பாதுகாப்பு உயர்வலய விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியதிலிருந்து - எழுந்தமானத்திற்கு அறிக்கைப்போர் நடாத்திக் கொண்டிருந்த இராணுவ உயர்பீடத்தின் போக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தக்க சமயத்தில் கண்டிக்கப்பட டிருக் கின்றது.

இராணுவத்தின் உயர்பீடத்திலிருந்து அண்மைய நாட்களாக வெளியிடப்பட்டு வரும் கருத்துக்களும், கெடுபிடிகள் நிறைந்த பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகங்களும்- அமைதி முயற்சிகளையே கேள் விக் குறியாக்கும் வகையில் அமைந்து வந்ததை எவரும் அவதானித்திருக்க முடியும்.

குறிப்பாக - இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் யாழ்.பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள், இந்த வகையில் - சமாதானத்திற்கான நேரடியான பாதிப்பைத் தருவனவாக இருந்தன.

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சமர்ப்பித்த திட்டவரைபில் - கையாளப்பட்டிருந்த நிபந்தனைகளும், வார்த்தைப் பிரயோகங்களும் முதலாக - நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கு சற்று முன்னதாக கண்டிக்குச் சென்று வந்த இராணுவத் தளபதி லயனல் பலகல்ல - அங்கு வைத்துத் தெரிவித்த கருத்துக்கள் வரை - அமைதியைத் தக்கவைப்பதற்கான பொறுப்புணர்வோடு வெளிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் - அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கட்டியெழுப்பப்பட்டிருக்கும் நம்பிக்கைத்தன்மையை எதுவித முன்யோசனையுமின்றி சிதறடிப்பதாகவே இந்தக் கருத்து வெளிப்பாடுகள் அமைந்திருந்தன.

நிரந்தர சமாதானத்தை நோக்கியதாக ஒவ்வொரு நகர்வும் - ஏராளம் பிரயத்தனத்துடனும், அர்ப்பணிப்புடனும் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லப்படும்போது, தனது பிடிவாதப் போக்கினால் அத்தனை பிரயத்தனங்களையும் அழித்து விடுமாப் போல இராணுவம் நடந்து வருவதன் - ஒரு பரிமாணமாகவே, ஊடகங்கள் வழியாக சொல்லப்பட்ட கருத்துக்களும் அமைந்தன.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வுக்கு மக்களை அனுமதிப்பதென்ற ஒரு விடயத்திலேயே - இத்தனை முட்டுக்கட்டைகளையும், நிபந் தனைகளையும் விதித்து வந்த இராணுவம் - தனது நிலைப்பாட்டினை நியாயப்படுத்தும் முகமாக, இனவாதி களிடையே தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடுமுகமாக- ஊடகங்களை, தனது வரைமுறை களைக் கடந்தும் பயன்படுத்த ஆரம்பித்திருந்தது.

தெற்கிலிருந்து வெளிவரும் இனவாதச் சிந்தனை நிரம்பிய ஊடகங்களும் இக்கருத்துக்களை முதன்மைப்படுத்தி வந்தன.

இதன் மூலமாக் - நாட்டின் அமைதியைக் காக்க வேண்டிய பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டிய படையினரே - தமது நிலைமாறி - குழப்பவாதிகளின் பின்பலமும் துணைவர - முன்னெடுத்த ஊடக யுத்தம் ஏற்படுத்தவிருந்த ஆபத்து தகுந்த சமயத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இத்தகைய கண்டிப்பையும், எச்சரிக்கையையும் வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் - அமைதிக்கான உறுதிப்பாட்டிற்கும், பொறுப்புணர்வுக்கும் ஏற்ற வகையில்- படையினரை வழிச் செலுத்தவும், கட்டுப்படுத்தவும் வேண்டும். அதுவே, அவரது அமைதி முயற்சிகளுக்கும் வெற்றி தருவதாகத் துணைதரும்.

### தமிழ்க் கட்சிகள் தெரிவித்த

# சந்திரிகா மீதான குற்றச்சாட்டு ஜனாதிபதி செயலகம் மறுப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முனைவதாக தமிழ்க்கட்சிகள் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுகளுக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்பு தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில்,

நாடாளுமன்ற பிரதிநிதிகளல்லாத இரண்டு தமிழ்க் கட்சிப் பிரமுகர்களும் ஜனாதிபதி மீது இத்தகைய குற்றச் சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். இக்குற்றச்சாட்டை ஜனா திபதி செயலகம் முற்றாக மறுக்கின்றது.

நாட்டின் பொறுப்பு வாய்ந்த தலைவி என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார். உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக இராணுவத்தளபதிகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியதற்கு எந்த மறைமுகமான நோக்கமும் கிடையாது. அது அதிகார பூர் வமான ஒரு சந்திப்பேயாகும். நாட்டின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதிக்கு இந்தக் கடமை இருக்கின்றது.

விடுதலைப்புலிகளுக்கு வானொலி உபகரணங்களை அனுமதித்தமை, புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு முரணானதாகும் எனவும் ஜனாதிபதி செயலகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இரத்தினபுரியிலும் வைரஸ் நோய்! கிருமி அடையாளம் காணப்பட்டது!

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்க ளில் 11 உயிர்களைப் பலிகொண்ட நோய்க்கு ‘என்ஸ்ரப் பிளெய்ஸ்’ என்ற வைரஸ்சே காரணம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நுளம்புகள் மூலம் இந்த வைரஸ் பரவுவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் நிபுணர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களில் இந்த நோயால் 33 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு தடுப்பூசி மருந்து ஏற்றல் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரஸ் மூளையைப் பர்திப்பதாலேயே மரணம் சம்பவிக்கின்றது என நோயியல் நிபுணர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாகாண இலக்கிய விழா இவ்வாண்டு வவுனியாவில்!

(பன்னாலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் 2003ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவை வவுனியாவில் நடாத்தப் போவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் இலக்கியவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே- அவர், இவ்வாறு தெரிவித்தார்.

எனினும்- யாழ்ப்பாணத்திலிருந்து மேற்படி விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்ற அறிஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் - இவ்விழாவை யாழ்.நகரில் வைப்பதற்கு மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(72)

# வட - கிழக்குப் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பிரதமரின் அலுவலகத்தில் விசேட கூட்டம்!

வட-கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் பிரதமரின் அலுவலகத்தில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், வட- கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு செயற்திட்டங்களுக்குக் கிடைத்திருக்கும் நிதி ஒதுக்கீடுகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விரிவாக ஆராயப் பட்டது.

இக்கூட்டத்துக்கு வட - கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தார். புனர்வாழ்வு நிதியை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும், வட-கிழக்கில் வெவ்வேறு பணிகளுக்கு ஒதுக்கப்படவேண்டிய நிதி பற்றிய விபரங்களும் அதிகாரிகளிடமிருந்து கேட்ட றிந்து கொள்ளப்பட்டன.

(க)

# வன்னியில் விவசாயத் திட்டங்கள் பாரியளவில் செயற்படுத்த முயற்சி

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை



சேதமடைந்திருக்கும் தண்ணிமுறிப்புக் குளம்

(கிளிநொச்சி)

வன்னியில் விவசாய நடவடிக்கைகள், பொறிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முதற்கட்டமாக - இது தொடர்பான திட்டங்களைத் தயாரிக்கும மதிப்பீட்டுப் பணிகளில் இறங்கியுள்ளது.

இத்தகைய திட்ட மதிப்பீட்டுப் பணிகளில் துறைசார் பொறியியல் வல்லுநர்களின் உதவியை பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கோரியுள்ளது. சிவில் மற்றும் நில அளவைப் பொறியியலாளர்கள் இவ்விடயத்திற்கு உதவுமாறும், இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் மனிதவலு தம்மிடம் இருப்ப தாகவும் அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

ஆகக் குறைந்தது 20 பொறியியல் வல்லுநர்களின் உதவி தமக்குத் தேவைப்படுவதாகவும் இவ்வுதவி கிடைத்ததும்- எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முடி வடையும் மழை காலத்துக்குப் பின்னர் வேலையைத் தொடர்ந்து அடுத்த மாரி காலத்துக்கு முன்னர் வேலைத் திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியும் எனவும் கூறப்பட் டுள்ளது.

இதன் மூலம் மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் தவிர்க்க முடிவதுடன், விவசாய நிலங்களில் ஏற்படக் கூடிய நீர்த்தட்டுப்பாட்டையும் தடுக்க முடியும் எனவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளதுடன், இவ்வாறு உதவ முன்வரும் பொறியியல்துறை வல்லுநர்களுக்கு தகுந்த வேதனம், தங்குமிட- போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.



வாய்க்கால் தூர்வாரும் பணி

# ஈராக் அணுகுமுறையில் புஷ்ஷின் திடீர் மாற்றம்; பொருளாதாரத்தின் பின்னடைவா? தந்திரோபாயமா?

ஈராக்கின் அரசியல் சூழல் திடீர் திடீரென மாற்றமடைவது போல் கடந்த மூன்று, நான்கு நாட்களின் நிகழ்வுகள் அமைந்துள்ளன.

போர் தயார்ப்படுத்தலும் அணி வகுப்புக்களும், ஆரவாரிப்போடு நிகழ்ந்து கொண்டிருந்தபோது, ஜனவரி நடுப்பகுதி அல்லது, பெப்ரவரி நடுப்பகுதியில் போர் தொடங்கும் என்றும் ஊகங்கள் நிலவின. முடிவில் எல்லா ஊகங்களுக்கும் முடிச்சுப்போடுவது போல் அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ்ஷின்



கோபி அனான்

புதுவருட உரையும், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனானின் பேச்சும் அமைந்து விட்டது.

இது போரைப் பிற்போடுகின்ற நிலைக்குமட்டுமல்ல, சமாதானத் தீர்வுக்கான அணுகுமுறைக்கே திசை திரும்பியது போன்று அமைகின்றது. இவ்வாறம் இரண்டு உலகத்தலைவர்களதும் உரைகளின் பின்னணியையும், அது ஏற்படுத்த உள்ள மாறுதல்களையும் நோக்குவோம்.

ஐ.நா.சபையின் செயலாளரான கோபி அனான், ஈராக் தொடர்பாகப் புதிய ஆண்டை வரவேற்கும் வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது, ஈராக்- ஐ.நாவின் ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் ஒத்துழைத்துச் செயல்படுகின்றது என்றும், இதுவரை பாதுகாப்புச் சபை விதித்த நிபந்தனைகள் எதனையும் மீறாத வகையில் ஈராக் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது எனவும் குறிப்பிட்டதுடன், அழிவுதரும் ஆயுதங்கள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை என்பதனால் ஈராக் மீது உடனடியாகப் போர் ஒன்றைத் தொடக்க முடியாது எனவும் கூறியிருந்தார்.

இவ்வாறு கோபி அனான் கூறியிருப்பது- அமெரிக்க, பிரித்தானிய ஆளும் வர்க்கத்திற்கு அதிர்ச்சியான செய்தியாகவே அமைந்திருக்கும். ஆனால், உலகத்தில் பெரும்பான்மையான மக்கள் ஐ.நா.செயலாளரின் இப்படியான உரையைத்தான் எதிர்பார்த்திருந்தார்கள் என்பது மட்டுமல்ல, நிம்மதியான நிறைவையும் அடைந்திருப்பார்கள்.

உண்மையில்- ஐ.நா.சபை தற்போதுதான் மிக நீண்டகாலத்திற்குப் பின் இப்படியான நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது என்பதும், அதுவே ஐ.நா.சபையின் அரசியற் பணி என்றும், அதனையே உலகில் அநேகமான மக்கள் விரும்புகிறார்கள் என்பதும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

ஐ.நா.சபை உலகத்திற்குத் தலைமை தாங்கும் சபையாகவே அதன் கடமைக்கூறுகளும், பொறுப்புக்களும் தயார்செய்யப்பட்டிருந்தது. பனிப்போர் தொடங்கிய காலம் முதல் புதிய உலக ஒழுங்கு உருவாகும்வரை, அதிகாரப்போட்டியில் இருதுருவ அரசியலின் தலைமைச் சக்திகள் எடுக்கும் முடிவுகளுக்காக- ஐ.நா.சபை தலையசைத்த நிலைமாறி, புதிய உலக ஒழுங்கின் பின் சமநிலையற்ற அரசியல் போக்கில் அமெரிக்காவின் விருப்புகளுக்கும் முடிவுகளுக்கும் தலையசைக்கும் சபையாக விளங்கியது.

இந்நிலை- கடந்த ஒரு தசாப்த காலம் அமெரிக்காவுக்குச் சாதகமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அதனால், அமெரிக்கா முழு அரசுகளையும் இறைமையற்றதாக மாற்றிக் கொண்டு, தனியிறைமை படைத்த வலுமிக்க சர்வதேச சக்தியாக இயங்கியது.

ஆனால், கடந்த மாதங்களில் ஐ.நா வின் பாதுகாப்புச்சபை எடுத்த தீர்மானமும், ஈராக் விடயத்தில் அமெரிக்கா தனித்துத் தீர்மானம் எடுக்க முடியாதது என்பதையும் காட்டியது. அதை எல்லாம் முறியடித்துச் செயற்பட முயன்ற அமெரிக்காவுக்கு, கோபி அனான் கொடுத்திருக்கும் அதிர்ச்சிச் செய்தியாகத் தற்போதைய விடயம் அமைந்திருக்கின்றது.

என்னதான் அமெரிக்காவின் நலன்விரும்பியாகக் கோபி அனான் இருந்தாலும், ஐ.நா.சபையின் பொறுப்புக்களும், கடமைகளும் அதன் தனித்தன்மையைப் பாதுகாக்கும் ஆளுமைமிக்க தலைமையைச் சார்ந்திருக்கும் என்பதை அவரது உரை வெளிப்படுத்தியுள்ளது. ஆனாலும், பாதுகாப்புச்சபையின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற அரசுகளினது செல்வாக்கும்- கோபி அனானின் ஆளுகை மீது செல்வாக்குச் செலுத்தும் விடயமாக உள்ளது.

இனிவரும் காலத்தில் ஐ.நா.சபையின் உலக ஆளும் பலம் அதிகரிப்பதுடன், தனி வல்லரசுகளது தான் தோன்றித்தனமான தலையீடுகள் தவிர்க்கப்படவேண்டும். அதற்குக் கோபி அனானுக்குப் பின்பு தலைமை ஏற்கவுள்ள செயலாளரின் ஆளுமைப் பலமே பதிலளிக்க வேண்டும்.



சதாம் ஹுசைனுக்கு ஆதரவாக அணிதிரளும் ஈராக்கிய மக்கள் நடத்திய பேரணி

மொத்தத்தில், ஐ.நா.சபை புதிய அத்தியாயத்தை வரையும் திருப்பு முனையில் நிற்கின்றது.

அவ்வாறு, கோபி அனானின் கருத்து- ஈராக் விடயத்தில் அமையும்போது, அமெரிக்கப் போர் விரும்பியான வில்லியம் புஷ்- அதே கருத்தை உள்வாங்கிப் பிரதிபலிப்பது போன்றநிலையில் அல்லவா அவரது உரையும் அமைந்திருக்கின்றது.

ஈராக், வடகொரியா பிணக்குகளைச் சமாதானமாகவும் ராஜீய ரீதியாகவும் தீர்க்கப்போவதாகக் குறிப்பிட்ட புஷ், நாம் தற்போது பொருளாதாரப் பலத்தைக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஒரு தாக்குதலின் பின் பொருளாதாரம் தாக்குப் பிடிக்குமா என்பது சந்தேகமானதே என மழுப்பலாகத் தனது



சதாம் ஹுசைன்

கருத்தை முடித்திருந்தார். புஷ் ஏன் இப்படிக் கூறினார் என்பது எல்லா ராஜதந்திர வட்டகையிலும் அதிர்ச்சியும், ஆச்சரியமாகவும் அமைந்திருக்கும். ஆனால், புஷ் அப்படி வெளிப்படுத்தியதற்கு அவர் கூறும் உடனடிக்காரணி- பொருளாதாரம் என்பது அவரது உரைமூலம் வெளிவந்துள்ளது.

இப்படி ஈராக்குடன் சமாதானமாக அணுகப்போவதாகக் கூறியிருப்பது ராஜதந்திரமாக இருக்குமா? என்ற சந்தேகமும், அது ஈராக்குக்கு அபாயமாக அமையப் போகிறதா? என்ற ஐயப்பாடும் - எல்லோர் மத்தியிலும் எழுந்துள்ள புதிய சர்ச்சையாகும்.

ஏனெனில், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட படைகளை ஈராக்கைச் சுற்றிக் குவித்து விட்டு, சமாதானம் எனப் பேசுவது வியப்பாக உள்ளது. இது வரையும் போர், போர் எனக் கத்தி விட்டு- திடீரெனச் சமாதானம் எனப் புஷ் பேசுவது அவரது பலவீனமா? அல்லது ஏனைய அரசுகளின் - பலமா? அல்லது ஈராக்கின் ராஜதந்திரமா? என்பது முக்கியமாக நோக்க வேண்டிய புதிய அத்தியாயமாகும்.

இதில் பொருளாதாரம் நெருக்கடியை அடைந்துள்ளது என்பது யதார்த்தமான பிரச்சினையாகவே உள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம் ஆபத்தான நிலையில் உள்ளது என அமெரிக்கப் பொருளாதார வல்லுநர்களே கூறுகின்றனர். அது ஈராக் போரினால் மேலும் அபாயத்தை அடையும் என்பதே அவர்களது எதிர்வுகூறலாக உள்ளது. குறிப்பாக- அமெரிக்கா நோக்கிய முதலீடுகளையும், அமெரிக்க கம்பனிகளின் உலகளாவிய வர்த்தகத்தையும் பாதிப்பதுடன், அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதத்தினைப் போருக்குச் செலவிடவேண்டி ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

புஷ்ஷை ஒரு தலைவராக ஏற்றுக்கொள்ளும் அமெரிக்க மக்கள்- அவரது பொருளாதாரக் கொள்கையையும், உள்நாட்டு விடயங்களில் அவர் கொள்ளுகின்ற அக்கறையின்மையையும் கண்டிப்பதுடன், அதிகமான அமெரிக்க மக்கள் ஈராக் மீதான போரை நிராகரிக்கின்றனர். பொதுவாகவே பொருளாதார நெருக்கடியால் பல சாம்ராச்சியங்கள் தகர்ந்து போனதை வரலாறு காட்டுவதை அவர்கள் நினைத்திருக்கலாம்.

மிக அண்மையில் அமெரிக்காவுடன் போட்டியிட்ட சோவியத் யூனியன்- தனது பொருளாதார பலவீனத்தினால் துண்டு துண்டாகப் போனதுடன், மறுசீரமைப்பு எனத் தொடங்கிய போராட்டத்தினால் மறுதலிக்கப்பட்ட தேசமாகக் காணப்படுகின்றது. எனவே- பொருளாதார நெருக்கடி என்பது போரைப் பின்னோக்கி நகர்த்துவதற்குரிய தெளிவான நடைமுறை என்பதை ஏற்றுக் கொள்ளமுடியும். ஆனால், அது மட்டும் தனித்த காரணமாக இங்கு கூறிவிடமுடியாது.

வில்லியம் பபோப் என்ற அமெரிக்க நாட்டவர் கூறுவது போன்று, வில்லியம் புஷ்ஷும், அவரது தந்தையாருக்கு ஏற்பட்டதுபோல்- ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக ஏன் இருக்கக்கூடாது? எனக் கேள்வி எழுப்புகிறார்.

அந்தளவுக்கு அமெரிக்க மக்கள் புஷ்ஷின் கொள்கைகளை விமாசிப்பவர்களாக உள்ளனர். புஷ்ஷை அமொிக்க மக்கள் தெரிவு செய்துவிட்டாலும், ஈராக் மீது போர்தொடுப்பதற்காகத் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை என வில்லியம் பபோப் கூறுகின்றார். பெருகிவரும் பொருளாதாரப் பிரச்சினை, தொழிலாளர் நெருக்கடிகள், வேலையின்மை என்பனவற்றில் புஷ் அக்கறையற்றவராக உள்ளார் என்ற குற்றச்சாட்டை 50-53 சதவீதமான அமெரிக்க மக்கள் கொண்டிருக்கின்றனர்.

உள்நாட்டு நெருக்கடி மட்டுமல்ல வெளிநாடுகளில் அமெரிக்கா பின்பற்றும் கொள்கையால் ஏற்பட்டு வரும் அசௌகரியங்களும், அபாயங்களும் அமெரிக்க மக்களுக்கு அமெரிக்காவிலும், பிறநாடுகளிலும்- நெருக்கடிகளை அதிகரித்த வண்ணமே உள்ளது.

மேலும்- வடகொரியாவில் எழுந்துள்ள அணுவாயுதச் சிக்கை புஷ்ஷின் ஈராக் தொடர்பான விடயத்தின் கவனத்தைத் திசை திருப்புவதில் வெற்றி கண்டுள்ளது. அத்துடன் வடகொரியா போன்று அமெரிக்கா

**கே.ரீ.கணேசலிங்கம்**

வால் துஷ்ட அரசுகள் எனப் பட்டியலிடப்பட்ட- ஈராக், ஈரான், சூடான், லிபியா என்பன அணுவாயுதங்களை வெளிப்படையாகப் பிரயோகிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டால், அமெரிக்காவின் உலகளாவிய ரீதியான இராணுவ- அரசியல் பலம் வீழ்ச்சியடையும் நிலைக்கு வேகமாகத் தள்ளப்பட்டு விடுமென அமெரிக்க ஆட்சியாளர்களிடம் அச்சம் நிலவுகின்றது.

மேலும்- உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடியோடு சர்வதேசப் பொருளாதாரப் போட்டி அதிக பிரச்சினையை புஷ் நிர்வாகத்திற்கு ஏற்படுத்திவிட்டது. டொலருக்கு எதிரான நாணயப்போட்டி, WTO வில் சீனாவின் ஈடுபாடு, யூரோலாந்தின் எழுச்சி எனப் பல அம்சங்கள் அமெரிக்காவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. இவை தொடர்பாக ஏற்கனவே இதே பத்தியில் பல தடவை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஈராக் விவகாரத்தினால் ஏற்பட்டுள்ள பாதுகாப்புச் சபையின் புதிய அணி நாடுகளான- ரஷ்யா, சீனா, பிரான்ஸ் என்பன தீவிர எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன், எதிர்காலத்திலும் அத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்ற நிலை, அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு புதிய சிக்கலாக உள்ளது. மிக அண்மையில் ரஷ்யா, ஈராக்கின் ஆயுதக் கண்காணிப்பாளர்களின்



வில்லியம் புஷ்

அறிக்கையை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துவதுடன், காலதாமதப்படுத்தி அதனை ஆய்வுசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே, தெளிவாகப் போருக்கு எதிரான உணர்வுகளை உலகம் அதிகம் பிரதிபலித்ததனால் அமெரிக்கர்கள் சமாதான முயற்சிகளுக்கு இசைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

ஆனால்- சமாதானச் சூழல், யுத்த சூழலைவிட ஆபத்து மிக்கதென்பது எதிரிகளாகச் செயற்பட்ட அரசியல் தலைமைகளுக்கு நன்கு விளங்கும். சதாம் ஹுசைன் மேற்கொண்ட ராஜதந்திரமும் அத்தகைய பக்குவம் மிக்க செயற்பாடாகவே கடந்த காலத்தில் அமைந்திருந்தது.

ஜோர்ச புஷ் எப்படி கொர்பச்சேவ்வை தோற்கடிக்கும் தந்திரமான அரசியல் கலாசாரத்தைப் பயன்படுத்தி, இறுதியில் தடைகளைப் போட்டு வெற்றி கண்டாரோ, அப்படியே சதாமும் தந்திரமான அரசியல் கலாசாரத்தைப் பின்பற்றியுள்ளார். அதில் வெற்றி கண்டாரா, இல்லையா என்பது குறிப்பிட்ட காலத்துக்குப் பின்பே தெரிந்து கொள்ளலாம். ஆனால், அதற்கான சூழலையும், யதார்த்த மாறுதலையும் தனது அணுகுமுறையால் சதாம் அடைந்திருக்கின்றார் என்பது மட்டுமே தற்போதைய நிலையாகும்.

எனவே, வில்லியம் புஷ்ஷின் தலைகீழ் மாறுதல், மீளவும் திசை திரும்புகின்ற பிரகடனத்தை அடையுமாயினும் சரி - அல்லது தற்போதைய நிலையிலும் சரி, அவரோடு அமெரிக்க வல்லரசுத்தனமும் வீழ்ச்சியை நோக்கித் திரும்புகின்றது என்பதையே காட்டுகின்றது.

இவற்றை மீறி யுத்தம் நிகழுமாயின் அல்லது யுத்தம் பற்றிப் பேசப்படுமாயினும்- அவரது அரசியல் வங்குரோத்துத்தனத்தையும் பலவீனமான அரசியல் கலாசாரத்தையுமே அது எடுத்துக்காட்டும். அதுவும் வல்லரசு என்ற அந்தஸ்தைப் பலவீனப்படுத்துவதாகவே அமைந்துவிடும்.

சுருக்கமாகக் கூறுவதாயின், புஷ் போர் புரிந்தாலும், புரியாதுவிட்டாலும் அமெரிக்க ஆதிக்கம் பலவீனப்படத் தொடங்கி விட்டதையே இச்சம்பவம் கோடிட்டுக்காட்டுகின்றது. ✪

# அழிவதற்கான நாட்கள் எண்ணப்படுகின்றன சதாம் ஹுசைனுக்கு ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை!



அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஈராக் அழிவதற்கான நாட்கள் எண்ணப்படுவதாக சதாம் ஹுசையினை எச்சரித்துள்ளார். ஈராக் மீது போர் தொடுக்க மாட்டோம் என சதாம் நம்பக்கூடும். அதனால், ஈராக் ஆயுதங்களைக் களைவதுபற்றி விருப்பமின்மையுடன் இருக்கின்றது எனவும் புஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை- ஈராக்கின் துணைப் பிரதமர், அமெரிக்காவின் ஏகாதிபத்திய வடிவமைப்பிற்கு உடன்படாத படியால்தான் ஈராக் மீது போர் தொடுக்க புஷ் நிர்வாகம் விரும்புகின்றது எனத் தெரிவித்ததுடன், ஈராக்கின் எண்ணெய் வளத்துடன் , மத்திய கிழக்கின் முழு எண்ணெய் வளத்திற்கும் தான் ஏக போக உரிமை கொண்டாடுவதற்கான நடவடிக்கையே ஈராக் மீதான போருக்கான முயற்சி என மேலும் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் வான் பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் அமெரிக்க விமானங்கள் பல்லாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை ஈராக்கிய மக்களுக்கு வீசியுள்ளதுடன், பாரிய ஆயுத தளபாடங்களையும் களமுனை வீரர்களையும் வளைகுடாப் பகுதியில் அமெரிக்கா குவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மக்களுக்கு பெரும் அழிவினைத் தரும் உயிரியல், இரசாயன, அணுவாயுதங்களைக் களைய வேண்டும் எனக் கோரியிருந்த ஜனாதிபதி புஷ்,

தற்போது ஈராக் அனைத்து ஆயுதங்களைக் களைய வேண்டும் எனக் கேட்டிருப்பது, புஷ்ஷினதும் அமெரிக்காவினதும் மத்திய கிழக்கு மீதான ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டினைத் தெளிவாகக் காட்டுவதாக சர்வதேச உறவுகளை ஆராயும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# நூற்றுக்கணக்கில் பலஸ்தீனர்கள் கலகத்தில் ஈடுபட்டதாகக் கைது!

கலகத்தில் ஈடுபட்டதாக நூற்றுக்கு மேற்பட்ட பலஸ்தீனர்களை அவர்களது தடுப்பு முகாமிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் கைது செய்துள்ளது. இச்சம்பவம் மேற்குக்கரை நகரான ரமழாவில் நடைபெற்றது.

இதன்போது இஸ்ரேலிய இராணுவம் வீசிய கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் பாதிப்படைந்த பல பலஸ்தீனர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு ரமழா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நாற்பதுக்கு மேற்பட்ட பலஸ்தீனர்களும் ஒரு இஸ்ரேலிய இராணுவச் சிப்பாயும் உள்ளடங்குவர்.

நேற்றுமுன்தினம் காஸா பள்ளத்தாக்கிலுள்ள முகாமிற்குள் இஸ்ரேலிய இராணுவத்தினர் நுழைந்து - ஐந்து பலஸ்தீனர்களைச் சுட்டுக் கொன்றதையடுத்தே மேற்படி கலவரம் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# விளையாட்டு

## டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் ஸ்ரீவ்வோ 10 ஆயிரம் ஓட்டங்கள்

(சிட்னி)



அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் கிண்ண இறுதிடெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது.

முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, 362 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இங்கிலாந்து அணி வீரர்கள் ஸ்ரிவோர் 71 ஓட்டங்களையும் கிறெஸ்லி 35 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி, மாலை ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 5 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. இப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஸ்ரீவ்வோ 102 ஓட்டங்களையும், கில்கிறிஸ் 45 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீவ்வோ 130 பந்துகளில் 18 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இது இவர் பெற்ற 29 ஆவது சதம் ஆகும்.

இப் போட்டியில் ஸ்ரீவ்வோ டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். உலகளவில், இவர்- 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற மூன்றாவது வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுடனான போட்டியில் இரட்டைச் சதமடித்தார் கிப்ஸ்

(கேப்ரவுன்)

தென்னாபிரிக்க - பாகிஸ்தானிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கட் இழப்புக்கு 557 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்று மதிய உணவுக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோதே தென்னாபிரிக்க அணி இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான ஸ்மித் மற்றும் கிப்ஸ் ஆகியோர் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 368 ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்மித் 216 பந்துகளில் 18 பவுண்டரிகளுடன் 151 ஓட்டங்களையும், கிப்ஸ் 6 சிக்ஸர்கள், 29 பவுண்டரிகளுடன் 240 பந்துகளில் 228 ஓட்டங்களையும் பெற்றனர். மக்கென்ஸி 51 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

டிப்பென்னர் 45 ஓட்டங்களுடனும் பௌச்சர் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது விளையாடிக்கொண்டிருந்தனர்.



# எண்ணெய் வளம், கடலுணவு, மர உற்பத்தியோடு சமாதானத்தினையும் ஏற்றுமதி செய்யும் தேசம்

மிகவும் இரம்யமான குளிர் காலத்தில் பெருந்தொகையான கடலுணவை உற்பத்தி செய்யும் நோர்வே, 4.5 மில்லியன் சனத்தொகையினை தன்னகத்தே கொண்டமைந்த நாடாகும். ஆனால், பொருளாதார ரீதியாக உற்பத்திப் பெருக்கத்தினைக் கொண்டமையாதபோதும் உலகின் விடுமுறைக்கால சொர்க்கபுரியாக நோர்வே திகழ்கின்றது.

அதேவேளை, இன்று உலகில் தனது செயற்பாட்டின் மூலம் பெரும புகழை என்றுமில்லாத அளவு சம்பாதித்துக் கொண்ட நோர்வே "சமாதானத்தின் சர்வதேசத் தலைநகரம்" என வர்ணிக்கப்படுகிறது. இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு 1901 ஆம் ஆண்டு முதல் சமாதானத்திற்கான நோபல் பரிசு நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோவில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றமையும் அதன் புகழிற்கு ஒரு காரணமாகும்.

இந்த வகையில் கடந்த ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் பெற்றுச் சென்ற ஒருமாத காலத்திற்குள், இரண்டு தசாப்த காலமாக யுத்தம் நடைபெற்ற இலங்கையில், அதன் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்- யாரும் எதிர்பார்க்காத வகையில் மத்தியஸ்தம் செய்து நோர்வே யுத்தத்தினை முடிவிற்குக் கொண்டு வந்தது. அத்துடன், அதிகாரப்பகிர்வு பற்றி கலந்துரையாடலுக்கும் அனுசரணையாக இருந்துவருகின்றது.

இதேபோன்று- இந்தோனேசிய அரசாங்கத்திற்கும் போராளிகளுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாவதற்கு நோர்வே அனுசரணையாக இருந்துள்ளது.

மேலும் 1993- ஆம் ஆண்டு ஒஸ்லோவில் கைச்சாத்தான "ஒஸ்லோ உடன்படிக்கை" இஸ்ரேலிய அரசாங்கத்திற்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்திற்கும் இடையில் கைச்சாத்தான போதும், அவ்வுடன்படிக்கை காலரீதியில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. ஆனால்- எதிர்காலத்தில் மத்திய கிழக்கின் தீர்வுக்கு அவ்வுடன்படிக்கை ஒரு மைல் கல்லாக அமையும் என்பது திண்ணம்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் முழுமையான அளவில் எட்டப்பட்டதா என்பதிலும் பார்க்க, முயற்சிகள் மேற்கொள்வதற்கான அடித்தளங்களை, உலகிலுள்ள முரண்பாடான இடங்களுக்கெல்லாம் நோர்வே தனது சமாதானச் செயற்பாட்டின் மூலம் எடுத்துச் சென்றுவருகின்றது.



இந்த வகையில் நோர்வேயின் உற்பத்திப் பொருட்கள் மட்டும் உலகிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எண்ணெய் வளத்தினையும், கடலுணவுகளையும், நிர்மாண வேலைகளுக்குத் தேவையான மர உற்பத்தியினையும் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக உலகிற்கு நோர்வே அனுப்புவதுடன் சமாதானத்தையும் அது ஏற்றுமதி செய்கின்றது.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பெற்றசன், தனது நாட்டின் சமாதான முயற்சிகள் பற்றிக் கருத்து வெளியிடுகையில் "எங்களால் எதனைச் செய்ய முடியுமோ அதனை நாம் செய்கின்றோம். அதேவேளை யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடுகளில், ஏதாவது வேறுபாட்டினை/வித்தியாசத்தினை ஏற்படுத்த முடியுமாயின் அது நமது கடமையே" எனக் கூறியுள்ளார்.

நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சரும், இலங்கையின் சமாதான முயற்சிகளின் பிரதம அனுசரணையாளருமான- விதார் ஹெல்கிசன் கருத்து வெளியிடுகையில், "நாங்கள் சிறிய நாடாக இருந்தபோதும், எமது பாதை மிக நெருக்கமானதுடன், நாங்கள் காலனித்துவ அனுபவத்தினையும் பெற்றிருக்கவில்லை. மேலும்- நோர்வே எந்நாட்டுடனும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலை இல்லை. பல்வேறு இனவாதிகளும் நாம் வேறுசக்திகளுடன் சேர்ந்து இச்சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக சந்தேகிக்கின்றனர். ஆனால், நாம் அவ்வாறு யாருடனும் கூட்டுச் சேர்வதில்லை. அத்துடன், ஏனைய நாடுகளுக்கு நோர்வே எந்தத் தீர்மானங்களையும் வழங்குவதுமில்லை" எனவும் தெரிவித்தார்.

"நோர்வே நாடானது, நேட்டோ அமைப்பின் அங்கத்துவ நாடாக இருந்தபோதும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடாக இருக்கவில்லை. நோர்வேக்கென பிரத்தியேகமான நேசஅணி ஒன்று உள்ளது. அது வெளிப்படையானது. நாங்கள் அமெரிக்கரும் அல்ல. ஐரோப்பியரும் அல்ல" இவ்வாறு நோர்வேயின் பிரபல பத்திரிகையாளர் நைல்ஸ் மொற்றின் யுக்ஹுட் தெரிவித்துள்ளார்.

இவ்வாறே- நோர்வேயின் மனிதாபிமான நடவடிக்கைகள் பிரபல்யமானது. முரண்பாடுகளும் மோதலகளும் வறுமையும் மிக்க நாடுகளில், நோர்வேயின் மனிதாபிமானப் பணிகள் தொடர்கின்றன. இதனால், இந்த நாடுகளின் அழைக்கப்பட்ட விருந்தாளியாக நோர்வே என்றுமுள்ளது.

ஒஸ்லோ பல்கலைக்கழக சர்வதேச உறவுகள் பீட பேராசிரியரான ஹன்லாண்ட் மட்டலசி-

"எது எப்படியானபோதும், சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், நோர்வே உலகத்தின் மையம் அல்ல" எனத் தன்னடக்கத்துடன் கூறுகின்றார்.

நோர்வே அரசாங்கமானது-

பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும் இடதுசாரிப போராளிகளுக்கும் இடையில் மற்றும்-

யூகோஸ்லாவியா, கொலம்பியா, சைப்பிரஸ் சோமாலியா, சூடான் ஆகிய நாடுகளிலும சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- பிராங் புரூணி

'த நியூயோர்க் ரைம்ஸ்'

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும்!

## பிரதமரின் செயலக வட்டாரங்கள் தெரிவிப்பு

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றைக் காணமுடியும் என பிரதமரின் செயலக வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

பிரதமர் ரணில் சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பியதும் - இவ்விவகாரம் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து விபரங்களை அறிந்துள்ளார் எனவும், தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுககளில் சுமுகமான முடிவு ஒன்றை அரச தரப்புக்குழு அறிவிக்கும் எனவும் பிரதமரின் அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் அமைச்சர்கள் மற்றும் உயர்மட்டப் படைத் தளபதிகளுடன் பிரதமர் விக்கிரமசிங்க நடததிய கூட்டத்தில், தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில் இவ்விடயத்தை எவ்வாறு கொண்டு செல்லலாம் என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தொிவித்த பிரதமர் ரணில், யுத்தத்தினால் பெறமுடியாத வெற்றியைச் சமாதான முயற்சிகள் மூலம் பெற்றுள்ளதாகக் கூறியதுடன், யுத்தத்தில் தோல்வியடைய ஊடகங்கள் முக்கிய காரணமாக இருந்தன. அமைதி முயற்சிகள நடைபெற்றுக் கொண்டிருக்கும போதும் இத்தகைய ஊடகங்கள் வழியான யுத்தம் மூலம்- அம்முயற்சிகளையும் தோல்வியடையச் செய்ய முயற்சிக்கக்கூடாது என்றார்.



தெல்லிப்பளையில் வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடாத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்றையதினம் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்

# இலங்கை அரசு கேட்டதாலேயே நோர்வே புலிகளுக்கு உதவியது

## சந்திரிகாவுக்கு நோர்வே பிரதமர் பதில்

இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடனேயே கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் விடுதலைப் புலிகளுக்கு தேவையான வானொலிக்கருவிகளை தருவித்துக்கொடுத்தார் என்று நோர்வேப் பிரதமர், இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி அனுப்பிய கடிதத்திற்கு அளித்த பதில் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இரு தசாப்தகாலமாக இலங்கையில் நடக்கின்ற யுத்தத்திற்கு முடிவு கண்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு ஏற்பாட்டாளராக பங்குகொள்ளுமாறு இலங்கை அரசாங்கமே அழைப்பு விடுத் தது. அப்போது உங்கள் தலை மையிலான பொ.ஐ. மு. அரசாங் கமே பதவியில் இருந்தது.

ஆட்சி மாறினாலும் சமாதானப் பேச்சுவார்த்தையை நோர்வே அரசாங்கம் முன்னெடுத்துச்செல்லுகின்றது. அவ்வாறானதொரு அடிப்படையிலேதான் சில உதவிகளை விடுதலைப் புலிகளுக்கு நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் செய்து வருகின்றார். இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவா கவே தூதுவர் செயற்படுகின்றார்.

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளை சீர்குலைக்கும் எத்தகைய நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபடவில்லை.

இலங்கையின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் சீர்குலைக்கும் நோக்கில் நோர்வே செயற்படவில்லை. இந்துமா சமுத்திரத்தல் எந்தவொரு நலனும் நோர்வே அரசாங்கத்திற்கு இல்லை.

எனவேதான், சமாதானப் பேச்சுவார்தை தொடர்பாக இலங்கையில் உள்ள கடும்போக்காளர்களின் கருத்து வெளிப்பாடுகள் கவலைதருகின்றன. ஆனாலும் அது குறித்து நோர்வே பொருட்படுத்தவில்லை என்றும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

# அதாவுல்லா உட்பட ஐவருக்கு கட்சியில் பதவி வகிக்கத் தடை

## கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பதவியையோ, அல்லது வேறு எந்த நிறைவேற்றுப் பதவியையோ வகிப்பதற்கு ஏ.எல்.ஏ.அதாவுல்லா உட்பட ஐந்து பேருக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணை செய்ததை அடுத்தே, கொழும்பு மாவட்ட நீதிவான் மாலினி குணவர்த்தனா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தத் தடை உத்தரவு இம் மாதம் 16 ஆம் திகதி வரை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


திருமறைக் கலாமன்றம்
CENTRE FOR PERFORMING ARTS
விண்ணப்பங்கள் கோரல்

கவின்கலைகள் பயிலகம்
SCHOOL OF FINE ARTS

2003 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்கு பின்வரும் பாடநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணபப்ங்கள் கோரப்படுகின்றன.

✦ வாய்ப்பாட்டு ✦ பரதம் ✦ கதகளி
✦ ஓர்கன் ✦ மிருதங்கம் ✦ வயலின்
✦ வீணை ✦ புல்லாங்குழல் ✦ கிற்றார்
✦ சித்திரம் ✦ நாடகமும் அரங்கியலும் (A/L 2005)

இப்பாடநெறிகளுக்கு குறைந்தளவு கட்டணமே அறவிடப்படும்.

நாடகப்பயிலகம்
SCHOOL OF DRAMA

எமது மன்றத்தால் வருடாந்தம் இலவசமாக நடத்தப்படுகின்ற நாடகப்பயிற்சி நெறிக்கான 2003 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப்பெற விரும்புபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது.

சிறுவர் கலைக்கூடம்
CHILDREN'S THEATRE

இக்கலைக்கூடத்தில் 2003 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் சேர்ந்து பயில விரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனதிற்கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும், கலை, விளையாட்டு ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறவும் தக்கதாக இலவசமாக நடத்தப்படுகின்றது.

பிரிவு I - 5 - 12 வயதுவரை
பிரிவு II - 13 - 16 வயதுவரை

குறிப்பு: ✱ அனைத்துப் பரிவுகளுக்குமான விண்ணப்ப முடிவுத் திகதி 20.01.2003 ஆகும்.
✱ விண்ணப்பப்படிவங்களை நேரடியாக யாழ்.மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021-2222393
E-mail: cpajaffna @ eureka.lk
website: www.cpateam.org.
(சி/407)


### காணாமற்போன...

பிடிக்கமுடியவில்லை.

தற்போது இவர் மரணமடைந்து விட்டதாக அவரது உறவினர்களால் நம்பப்படுகிறது. இவரின் மரணம் தொடர்பாக கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களும் நண்பர்கள் மற்றும் உறவினர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

### சமாதானப்பேச்சு...

குறித்த பேச்சுவார்த்தைகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் முடிவடையக்கூடியவை அல்ல என்றும் சொன்னார். ஜனாதிபதி கூறுவது போன்றோ அல்லது எதிர்க்கட்சிகளில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுவது போன்றோ நாடு பிளவுபடக்கூடியவகையில் அரசியல் தீர்வு எதனையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை.

ஒன்றுபட்ட இறைமைக்குள் ஆனால், சமஷ்டித தன்மை கொண்ட ஆட்சி முறை குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக எடுத்துக்காட்டிய அவர், இனிமேலும் அவ்வாறான ஒரு தீர்வு முயற்சிக்கு சிங்கள அரசியல் தலைமைகள் இணங்கிச் செல்லவில்லையானால் நாடு பாரிய எதிர்விளைவுகளை எதிர்நோக்கும் என்றும் எச்சரிக்கை செய்தார்.

கடந்த காலப் பேச்சுவார்த்தைகளைவிட இம்முறை நடைபெறுகின்ற பேச்சுவார்த்தை ஒருவருடத்தை தாண்டி விட்டது. கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இன்னும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நாம் தயாராக வேண்டும்.

ஆனால், பேச்சுவார்த்தை முறிவடைவதற்கு அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்காது. மீண்டும் ஒரு யுத்தத்தை இந்த அரசு விரும்பவில்லை என்று தெரிவித்த பிரதமர், ஜனாதிபதியின் இடையூறுகளும் தலையீடுகளும் எமது நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்கு சற்று பின்னடைவைக் கொடுப்பதாகச் சிலர் கூறுகின்றனர் என்றும் கூறினார்.

ஆனாலும், ஜனாதிபதியின் அவ்வாறான நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் அலட்டிக்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் கட்சி வேறாக இருந்தாலும் அரசாங்கம் என்ற வரையறைக்குள் அவர் இறங்கி வர வேண்டிய நிலை ஏற்படும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

### அடுத்த...

பீரிஸ், ரவூப் ஹக்கீம், மிலிந்த மொறகொட, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, ஒஸ்ரின் பெர்ணாண்டோ, பேனாட் குணதிலக ஆகியோரும்-

புலிகளின் குழுவில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் , மூத்த தளபதி கேணல் கருணா ஆகியோரும் இப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இப்பேச்சுக்களின்போது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரங்கள் மற்றும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்திட்டங்கள், மனித உரிமை பேணும் விவகாரங்கள் மற்றும் ஒஸ்லோவில் விவாதிக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்கள் பற்றியும் தொடர்ந்து பேசப்படவுள்ளது.

இப்பேச்சுவார்த்தையை முன்னிட்டு ஊடகவியலாளர்களின் வசதிகள் கருதி றோஸ் கார்டின் ஹொட்டேலின் கீழ்த்தளத்தில் 'பைல் இன் றூம்' என்ற ஊடக நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

### எம்மை மீளக்.....

இதேவேளை- இந்த உண்ணா விரதப் போராட்டம் நாளைமறுதினம் முதல் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதற்கமைய, திங்கள் முதல் மறியல் போராட்டமும் நடத்தப்படவுள்ளது.

6 ஆம் திகதி சகல பொது அமைப்புக்களும் இணைந்தும்,

7 ஆம் திகதி ப.நோ.கூ சங்கங்களும், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும்,

8 ஆம் திகதி விவசாயிகள் சங்கமும், 9 ஆம் திகதி இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்களும்,

10 ஆம், திகதி கடற்தொழிலாளர் சங்கங்களும் போராட்டம் நடத்தவுள்ளன.

(க,லி,68)


ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
A/L 2005
கலை, வர்த்தக, கணித வகுப்புகள்
ஆரம்பம்:- 05 - 01 - 2003
மாலை 3.00 மணி
(087)


## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.53 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 153.65 | 155.06 |
| 1 யூரோ | 96.76 | 101.17 |
| 1 சுவிஸ் பிராங் | 68.48 | 69.64 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.94 | 54.94 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.